සමාජ සවිබලගැන්වීම් හා සුභසාධන අමාත්‍යාංශය
சமூகவலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Divineguma Development**

4වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
4வதுமாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
4th floor, Sethsiripaya ,Battaramulla

මගේ අංකය
எனதுஇல
My No } DDD/HO/SW/15/08/ஆய்வு

ඔබේ අංකය
உமது இல
Your No }

දිනය
திகதி
Date } 2016.11.09

சகல மாவட்ட வாழ்வின் எழுச்சிப்
பணிப்பாளர்கள்,

**சமுர்த்தி பயனாளி மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் தகவல்களை முறைமைப்படுத்தும் ஆய்வின் தரவுகளை கணனிமயப்படுத்துவதை துரிதப்படுத்தல்.**

இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் தரவுகளை சேகரிக்கும் செயற்பாடுகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கையானது 2380480 மட்டளவாகும். இந்த ஆய்வின் தரவுப்படிவங்களை கணனிமயப்படுத்தி அதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட எடுகோள்களைப் பின்பற்றி பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்து அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கமைய 2017 ஜனவரி மாதத்திலிருந்து புதிய நிவாரண வேலைத்திட்டங்களை செயற்படுத்த வேண்டியுள்ளது.

02. ஏற்கனவே இந்த வேலைத்திட்டத்திலுள்ள முக்கியத்துவத்தினை தாங்கள் நன்றாக விளங்கிக் கொண்டிருப்பதால் ஆய்வின் தரவுகளை கணனிமயப்படுத்தும் வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் எழுத்து மூல அறிவுறைகள் தங்களுக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ளது.

03. இருப்பினும் நாளாந்த தரவுகளை உட்படுத்தும் முன்னேற்றத்தினை பகுப்பாய்வு செய்யும் போது விளங்குவது இதுவரையில் மாவட்ட மட்டத்தில் வழங்கப்பட்டுள்ள முன்னேற்றமானது எவ்விதத்திலும் போதுமானதல்ல என்பதாகும். ஆய்வுத் தரவுப்படிவம் ஒன்றினை கணனிமயப்படுத்தும் பொருட்டு ரூபா 20 வீதம் வழங்கி கணனி அறிவுள்ள வெளியார் பிரிவினரைப் பயன்படுத்திக் கொண்டு இச் செயற்பாட்டினை துரிதப்படுத்துவதற்கும் குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது 2016.11.30ம் திகதிக்கு முன்னர் இப்பணியினை பூர்த்தி செய்வதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதனை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகின்றேன். ஆதற்கமைய இக்கால எல்லையினை நீடிப்பதற்கான எண்ணங்கள் எவ்விதத்திலுமில்லை.

04. மேலும் எனது சம இலக்கமும் 2016.11.22ம் திகதியிடப்பட்டதுமான ஆலோசனைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களது கவனத்தினை செலுத்தி 2016.11.30ம் திகதிக்கு முன்னர் மேற்கொண்ட பணிகளை பூர்த்தி செய்யுமாறும் மேலும் அறியத்தருகின்றேன். இந்த ஆய்வுப்படிவத்தினை கணனிமயப்படுத்தும் போது ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் தேவையான நிதி ஒதுக்கீட்டு வரையறைகளைக் கணக்கிட்டு கோரவேண்டியதுடன் இது வரையில் கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுத்தரவுப் படிவங்களை அடிப்படையாகக் கொண்டு அதற்குத் தேவையான கோரிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ளல் வேண்டும்.

**நீல் ஹப்புஹின்ன**
**பணிப்பாளர் தலைமையதிபதி**

**பிரதிகள் :**

01. சகல மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட வாழ்வின் எழுச்சி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள் - த.கூ.க. பொருட்டும் உ.ந. பொருட்டும்
02. சகல பிரதேச செயலாளர்கள் - ஆய்வுத் தரவுகளை கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் பொருட்டு
03. சகல தலைமையக முகாமையாளர்கள் - ஆய்வுத் தரவுகளை கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் பொருட்டு

D/KUG/ALIYARSR/SISUREKA

| | | | | |
|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල් | අතිරේක අධ්‍යක්ෂජනරාල් | අධ්‍යක්ෂ (පාලන) | ප්‍රධාන ගණකාධිකාරී | කාර්යාලය |
| பணிப்பாளர் தலைமையதிபதி | மேலதிகபணிப்பாளர்தலைமையதிபதி | பணிப்பாளர்(நிர்வாகம்) | பிரதான கணக்காளர் | அலுவலகம் |
| Director General | Additional DirectorGeneral | Director (Administration) | Chief Accountant | Office |
| Tel:011-2873802/2872202 | 011-2871672 | 011-2873799 | 011-2869742 | 011-2887280 |
| Fax -011-2889002 | 011-2887280 | 011-2873996 | 011-2869742 | 011-2887722(**Hotline**) |
| dg@divineguma.gov.lk | adg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | |